RPAD

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ) சிவகங்கை அவர்களின் நடவடிக்கைகள்.

முன்னிலை: திருமதி.இரா. காவியம், டி.சி.இ.,

ந.க.எண்:5032/2018/சிம-2 நாள்: 11 .09.2018

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம்-2017 - நகர் ஊரமைப்பு - சிவகங்கை மண்டலம் - இராமநாதபுரம் மாவட்டம்/வட்டம்/ஊராட்சி ஒன்றியம் - சூரங்கோட்டை குருப் - முதுனாள் கிராமம் - சர்வே எண்:204/2(ப)-இல் 4115.66சமீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்:78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3) நாள்:04.05.2017.
2. அரசாணை எண்:172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3) நாள்:13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்:13193/2017/LA2 நாள்:30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017, 20.12.2017.
4. மனுதாரர் திரு.R. ஜெய்வீன் மற்றும் திரு.R. பிரவினா அவர்களின் Online விண்ணப்பம் நாள்:08.05.2018.

******

உத்தரவு:

பார்வை 1 மற்றும் 2-இல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 3-இல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும், பார்வை 4-இல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டம்/வட்டம்/ஊராட்சி ஒன்றியம், சூரங்கோட்டை குருப், முதுனாள் கிராமம், சர்வே எண்:204/2(ப)-இல் 4115.66சமீ பரப்பளவு அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ.வ.மு/ந.ஊ.து.இ(சி.ம)எண்:672/2018 என எண்ணிட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 4115.66சமீ |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 02 |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 20 |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | : | 3-22. |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | : | 2737.85சமீ |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு | : | 305.00(10.02%) |

7. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை, அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)
சிவகங்கை மண்டலம், சிவகங்கை.

11/7/18

இணைப்பு:
மனைப்பிரிவு வரைபடம் -2 நகல்கள்.

பெறுநர்
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

நகல்:
1. ஊராட்சிகளின் உதவி இயக்குநர்.
   மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்.
   இராமநாதபுரம் மாவட்டம்.
   (உத்தரவு நகல் மட்டும்)

2. உதவி இயக்குநர்,
   நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை,
   இராமநாதபுரம் மாவட்டம்.
   (உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு)

3. சார்பதிவாளர்,
   இராமநாதபுரம் Joint-II.
   இராமநாதபுரம் மாவட்டம்.
   (உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு)

4. திரு.R. ஜெய்வீன் மற்றும் R. பிரவினா
   த/பெ.B. இராதாகிருஷ்ணன்,
   7/3 முதுனாள் கிராமம்,
   சூரங்கோட்டை,
   இராமநாதபுரம் மாவட்டம் 623 501.

5. வைப்பறை (உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு).

# மனையிடம் அங்கீகாரம் அளித்து உத்தரவு

## இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.ஆ.இராஜேந்திரன்,பி.காம்., அவர்கள்,

ந.க.தி4/04101/2020

நாள்: 1?.01.2021

பொருள்

மனையிடம் அங்கீகாரம் - இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம் - சூரங்கோட்டை ஊராட்சி - முதுனாள் கிராம சூரங்கோட்டை குரூப் சர்வே எண்:204/2 Pt-ல் உள்ள 4115.65 சதுர மீட்டர் அளவுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைபடுத்தி அங்கீகாரம் அளித்து உத்தரவிடுதல் - சார்பு.

பார்வை

1. அரசாணை(நிலை) எண்:256. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் (சி2) துறை, நாள்:18.08.1997.
2. அரசாணை எண் 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (UD(3)) நாள்: 04.05.2017.
3. இரா.ஜெய்வின் மற்றும் ஆர்.பிரவினாத/பெ.இராதாகிருஷ்ணன் 7/3 முதுனாள் கிராமம், சூரங்கோட்டை ஊராட்சி, இராமநாதபுரம்.
4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) இராமநாதபுரம் அவர்களின் கடிதம் ந.க.தி4/ /20 நாள்: .02.2021.
5. சிவகங்கை, நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ) அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்: 5032/2018/சிம-2 நாள்:11.09.2018.

**உத்தரவு :**

பார்வை 2ல் காணும் அரசாணையின்படி அங்கீகாரம் இல்லாத மனைப்பிரிவுகளை உரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு மற்றும் உரிய கட்டணங்களை பெற்றுக்கொண்டு வரன்முறை செய்து கொள்ள சம்மந்தப்பட்ட மனைப்பிரிவு அமைந்துள்ள பகுதிகளின் தகுதி வாய்ந்த அலுவலர் (Competent Authority )-களுக்கு அதிகாரம் அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம், சூரங்கோட்டை ஊராட்சி, முதுனாள் கிராமம், சூரங்கோட்டை குரூப் சர்வே எண். 204/2 Pt-ல் அமைந்துள்ள மனை எண்கள்: 3 முதல் 22 வரை உள்ள (மொத்தம் 20) மனை எண்களுக்கு 4115.66 சதுர மீட்டர் அளவுள்ள அங்கீகாரம் மற்ற மனைப்பிரிவினை அங்கீகாரம் அளிக்க கேட்டு பார்வை-3ல் காணும் விண்ணப்பத்தின் வாயிலாக கேட்டுள்ளார்.

மேற்கண்ட விண்ணப்பம் உரிய பரிசீலனை மற்றும் இசைவிற்காக பார்வை-4ல் காணும் கடிதம் வாயிலாக சிவகங்கை, நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இது தொடர்பாக உரிய பரிசீலனையின் அடிப்படையில் மேற்கண்ட அங்கீகாரமற்ற மனைப்பிரிவினை (Layout) பரிசீலனை செய்து வரன்முறை படுத்திக்கொள்ள பார்வை-5ல் காணும் செயலாணைகளின் படி ஒப்புதளிக்கப்பட்டு அம்மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ.வ.மு/ந.ஊ.து.இ(சி.ம) எண்: 672/2018 என எண்ணிடப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

பக்:14

மேலும் மேற்கண்ட மனைப்பிரிவு:-

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த ப் பரப்பளவு | : | 4115.66 ச.மீ |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | : | 02 எண்ணிக்கை |
| விற்பனை செய்யபடாத மனைகள் | : | 20 |
| விற்கப்படாத மனைகளின் | : | 3 to 22 |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | : | 2737.85 ச.மீ |
| பொது ஒதுக்கீடு (OSR) பிறவிடம் | : | 305.00ச.மீ (10.02%) |

மேற்கண்ட மனை எண்கள்: 3 முதல் 22 வரை உள்ள (மொத்தம் 20) மனை எண்களுக்கு அங்கீகாரத்திற்காக ஒவ்வொரு மனைப்பிரிவிற்கும் வரன்முறைபடுத்துதல் கட்டணம் (Regularisation Charges) மற்றும் வளர்ச்சி கட்டணம் (Development Charges) பார்வை-5ல் காணும் செயல்முறை ஆணையுடன் இணைப்பில் கண்ட படிவத்தில் குறிப்பிடப்பட்டு மேற்கண்ட கட்டணங்களை செலுத்த வேண்டிய அரசு கணக்கு தலைப்புகளும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் விண்ணப்பதாரரின் மனை எண்கள்: 3 முதல் 22 வரை உள்ள (மொத்தம் 20) மனை எண்களுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் விண்ணப்பதாரர் உரிய கணக்கு தலைப்புகளில் கட்டணங்களை செலுத்திய அதற்கான அசல் சாலான்கள் மற்றும் இரண்டு ஒளிப்பட நகல்கள் இணைக்கபட்டுள்ள விபரங்கள் கீழ்கண்டவாறு உள்ளது.

| தொகை செலுத்த வேண்டிய விபரம் | பணம் செலுத்த வேண்டிய கணக்கு தலைப்பு விபரம் | பணம் செலுத்திய கருவூலகம் மற்றும் நாள் விபரம் | செலுத்தப் பட்ட தொகை |
|---|---|---|---|
| வரன்முறைபடுத் துதல் கட்டணம் (Regularisation Charges) | 0217- Urban Development -60 – Other Urban Development Schemes -800 – Other receipts- AT–Receipts Under Regularisation Charges of Unapproved Layouts and Plots –DTCP (DPC 217 -60-800-AT-0007) | சார்நிலை கருவூலகம், இராமநாதபுரம் எண்: 5040/ 09.12.2020 | Rs. 82140 |
| வளர்ச்சி கட்டணம் (Development Charges) | தற்போது வளர்ச்சி கட்டணம் செலுத்த வேண்டிய அரசுக்கணக்கு தலைப்பு குறிப்பிடப்படாததால் சூரங்கோட்டை ஊராட்சி கணக்கு எண் -1ல் செலுத்தப்பட்டுள்ளது. (இத் தொகையினை உரிய கணக்கு தலைப்பு பெறப்பட்டவுடன் தனி அலுவலர் / ஊராட்சி மன்றத் தலைவர் உரிய அரசுத்தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்) | சலான் எண். 375/ 17.12.2020 (கணக்குஎண் 1) | Rs. 68450 |

மேலும் விண்ணப்பதாரர் செலுத்த வேண்டிய கூராய்வு கட்டணமாக மனை 1-ற்கு (Scrutiny Fee) ரூ.500/-வீதம் Online-ல் விண்ணப்பதாரர் செலுத்தி விட்டதாகவும் பார்வையில் காணும் செயலாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்கான நகல் விண்ணப்பதாரால் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே விண்ணப்பதாரர் சூரங்கோட்டை ஊராட்சி, முதுனாள் கிராமம், சூரங்கோட்டை குரூப் சர்வே எண்கள்: 3 முதல் 22 வரை உள்ள (மொத்த 20) மனைகளை வரன்முறை செய்வதற்காக பார்வை-5-ல் செயலாணையில் குறிப்பிடப்பட்டள்ள நிபந்தனைகளின்படி அனைத்து கட்டணங்களையும் செலுத்தி அதற்கான விபரம் சமர்பித்துள்ளதால். பார்வை-5ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்கள் ஒப்புதல் அளித்ததின் அடிப்படையில் தனியரின் மனைப்பிரிவுகள் அங்கீகாரம் அளித்து இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு இந்த விண்ணப்பத்தில் கண்டுள்ள மனைகளுக்கு (சர்வே எண்: 204/2 Pt-ல், மனை எண்கள்: 3 முதல் 22 வரை உள்ள (மொத்தம் 20) மனை எண்களுக்கு மட்டுமே பொருந்தும்.

(குறிப்பு: இம்மனைப்பிரிவில் விதிமீறல் ஏதும் கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு உடன் ரத்து செய்யப்படும்)

இணைப்பு:- அங்கீகரிக்கப்பட்ட மனைவரைபட நகல்

*வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)*
*இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம்*

பெறுநர்:
இரா.ஜெய்வின் மற்றும் ஆர்.பிரவினா
த/பெ.இராதாகிருஷ்ணன்
7/3 முதுனாள் கிராமம், சூரங்கோட்டை ஊராட்சி,
இராமநாதபுரம்.

நகல்:-

1. துணை இயக்குநர் (பொ), நகர் ஊரமைப்புத்துறை, சிவகங்கை, சிவகங்கை மாவட்டம்,
2. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், இராமநாதபுரம்,
3. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், இராமநாதபுரம்.